DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -21

| | | |
|---|---|---|
| Name | : பரமசிவம் | Caste: |
| Father's / Husband Name: | கோவிந்தன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 7th day of January 2025.

A1 and A3 to A6 present.

**முதல் விசாரணை**

நான் அம்மாப்பேட்டை பரிசுமுதலியார் காட்டில் வசிக்கிறேன். நான் ரியல்எஸ்டேட் தொழில் செய்கிறேன். எனக்கு எதிரி ஆனந்தனை தெரியாது. என்னிடம் ஸ்டார்சிட்டி என்ற வாகனம் அடகு வைக்கப்படவில்லை. வழக்கு சம்மந்தமாதக என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

11.10.2011 அன்று அம்மாப்பேட்டை சத்தியசாய் டிவிஎஸ் கம்பெனியில் ஒரு டிவிஎஸ் ஸ்டார்சிட்டி பச்சை கலர் வண்டியை ரூ.25,000/- முன்பணம் செலுத்தி மீதி தொகைக்கு பைனான்ஸ் போட்டு கடனை முழுமையாக செலுத்திவிட்டு 11.12.2012 இல் எனது வண்டியின் பதிவு எண் டி.என்.54 டி 5902 என்பதை பைனான்சில் இருந்து மீட்டு அதன் ஆர்சி புக்கை பெற்று என் வீட்டின் அருகிலுள்ள அசோக்குமார் என்பவரிடம் ஆர்சி புக்கை அடமானம் வைத்தேன் என்றும், அம்மாபோட்டை குமரன்

தெருவை சேர்ந்த சந்தோஷ்குமார் என்பவரிடம் எனது வண்டியை 03.02.2014 ஆம் தேதியன்று ரூ.10000/- க்கு அடமானமாக பெற்றுக்குகொண்டு வண்டியை கொடுத்துவிட்டேன் என்றும், பின்னிட்டு அந்த வண்டியை சந்தோஷ்குமார் அந்த வண்டியை பயன்படுத்தி வந்தார் என்றும், 03.12.2014 அன்று போலிசார் என்னை விசாரித்ததாகவும் போலிசார் என்னிடம் மேற்படி சந்தோஷ்குமார் 01.09.2014 அன்று அவரது நண்பருடன் சேர்ந்து விஜயன் என்பவரை கொலை செய்ய செய்த சம்பவத்திற்கு எனது வண்டியை பயன்படுத்தியதாக சொன்னார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

மேற்படி வண்டி எனக்கு பாத்தியப்பட்டது என்பதை நான் போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். சந்தோஷ்குமாரிடம் பணத்தை பெற்றுக்கொண்டு வண்டியை சந்தோஷ்குமாரிடம் ஒப்படைத்துவிட்டதாகவும் சொன்னேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- L. Kalaivani,

III Additional District Judge,

Salem.